இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் **(CEDPL)**

## வியாபார நிருவாகமானி / வர்த்தகமானி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2021 / 2022

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் பின்வரும் பட்டப்படிப்புகளுக்கு வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 16.01.2024 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

- வியாபார நிருவாகமானி (Bachelor of Business Administration)
- வர்த்தகமானி (Bachelor of Commerce)

### ஆகக் குறைந்த தகைமைகள்

01. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2021 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் / சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

02. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் (II)

**அல்லது**

03. இலங்கை தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (இரண்டு வருட பாடநெறி)

**அல்லது**

04. இலங்கை தொழிநுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ்.

**அல்லது**

05. கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்துடன் CIMA Stage – II, அல்லது Chartered (CASL) Stage – II அல்லது AAT இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

06. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள்.

**கட்டணம்** : **ரூபா. 150,000.00**

**மொழி மூலம்** : கற்கை நெறி தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

**தெரிவு செய்யப்படும் முறை** : நேர்முகப்பரீட்சை மற்றும் நுழைவுப்பரீட்சை

**விண்ணப்ப முடிவுத் திகதி** : **16.01.2024**

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 1500.00** ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டினை (Paying-In-Voucher - PIV) பூரணப்படுத்தி எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **கணக்கு இலக்கம் 228-1001-6000-1692 ற்கு** செலுத்த முடியும். விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக இணையத்தளத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்வதோடு அதனை பூர்த்தி செய்து **பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வியாபார நிருவாகமானி / வர்த்தகமானி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பு - 2021 / 2022"** எனக்குறிப்பிட வேண்டும். அத்துடன் இணையத்தளத்திலுள்ள **Google Form** ( https://forms.gle/qdqQmeRzHQgrw7L19 ) னை தவறாது நிரப்புதல் வேண்டும்.

**குறிப்பு:**

- இக்கற்கை நெறியானது, போதுமானளவு மாணவர்கள் ஒவ்வொரு மொழிக்கும் உள்வாங்கப்படுமிடத்து மாத்திரமே ஆரம்பிக்கப்படும்.
- செலுத்தப்பட்ட கட்டணங்கள் எக்காரணங்கள் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

பிரதிப்பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்